# THE QUAIDE MILLETH COLLEGE FOR MEN

## காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி,

## மேடவாக்கம், சென்னை

## தமிழ் (CLA1L)

## வினா விடை வங்கி

### இரண்டு மதிப்பெண்

1. காணிநிலம் வேண்டும் என்று பாரதியார் யாரிடம் கேட்கின்றார்? **பராசக்தி**
2. பாரதியாரின் இயற்பெயர் என்ன? **சுப்ரமணியன்**
3. மகாகவி பாரதி பணியாற்றியப் பத்திரிக்கை யாது? **சுதேசமித்திரன்**
4. வசனகவிதையை தமிழில் அறிமுகப்படுத்தியவர் யார்? **பாரதியார்**
5. ஷெல்லிதாசன் என்று அழைக்கப்பெற்றவர் யார்? **பாரதியார்**
6. கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம் ஆகிய மூன்றும் எவ்வாறு அழைக்கப்பெறுகின்றன? **முப்பெரும் காவியங்கள்**
7. பாரதி உருவாக்கிய பத்திரிக்கை எது? **இந்தியா**
8. இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கு பாரதி எதை வேண்டுகிறார்? **வல்லமை**
9. புரட்சிக் கவிஞர் என்று அழைக்கப்பெறுபவர் யார்? **பாரதிதாசன்**
10. புதுவைக்குயில் என்று அழைக்கப்பெற்றவர் யார்? **பாரதிதாசன்**
11. சிந்துக்குத் தந்தை என்று பாரதியாரை புகழ்ந்தவர் யார்? **பாரதிதாசன்**
12. பாரதிதாசனின் இயற்பெயர் என்ன? **கனகசுப்புரத்தினம்**
13. தமிழ்க்காதல் என்னும் பாடலை இயற்றியவர் யார்? **பாரதிதாசன்.**
14. எங்கெங்கும் காணினும் சக்தியடா என்று தொடங்கும் பாடலைப் பாரதிதாசன் யார் முன்னிலையில் பாடினார்? **பாரதியார்**
15. கண்களும் ஒளியும்போல யார் யார் சரிநிகர் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும்? **ஆணும் பெண்ணும்**
16. கவிமணி பிறந்த ஊர் எது? **தேரூர்.**
17. குழந்தைக் கவிஞர் என்று அழைக்கப் பெறுகின்றவர் யார்? **கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை**
18. ஆசியஜோதி யாரைப்பற்றிப் பாடப்பெற்ற நூல்? **புத்தர்**
19. நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் என்ற நூலை எழுதியவர் யார் **கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை**
20. சாகித்ய அதாதமியின் விருதுப் பெற்ற பாரதிதாசனின் படைப்பு எது? **பிசிராந்தையார்**
21. நோபல் பரிசு பெற்ற ஆங்கில புதுக்கவிதைத் தொகுதி எது? **பாழ்நிலம் (waste of land)**
22. கண்டழுதுவோன், கிறுக்கன் எனப் பல புனைப்பெயர்களில் தமது படைப்புகளை எழுதியவர் யார்? **பாரதிதாசன்.**
23. பாரதிதாசன் நடத்திவந்த திங்கள் இதழ்? **குயில்**
24. பால்வீதி என்ற கவிதைத் தொகுதியை எழுதியவர் யார்? **அப்துல் ரகுமான்.**

25. அப்துல்ரகுமானின் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற கவிதைத்தொகுதி எது? **ஆலாபனை.**
26. புதுக்கவிதையில் குறியீடு என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்தவர் யார்? **அப்துல்ரகுமான்**
27. குருடர்களின் யானை எதைக் குறிக்கிறது? **மூடமதங்கள்**
28. நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ? என்று பாரதி எதனைக் குறிப்பிடுகின்றார்? **வீணை**
29. தகத்தாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர் என்று அழைத்தவர் யார்? **பாரதிதாசன்**
30. புதுக்கவிதையின் தந்தை என்று அழைக்கப்படுகின்றவர் யார்? **ந. பிச்சமூர்த்தி**
31. புதுக்கவிதையின் முன்னோடி என்று அழைக்கப்படுகின்றவர் யார்? **பாரதியார்**
32. கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் என்னும் சிறுகதையை எழுதியவர் யார்? **புதுமைப்பித்தன்**
33. சிறுகதை மன்னன் என அழைக்கப்பட்டவர்? **புதுமைப்பித்தன்.**
34. செல்லம்மாள் கதை எந்த உத்தியால் அமையப் பெற்றுள்ளது? **பின்னோக்கு உத்தி**
35. புதுமைப்பித்தன் இயற்பெயர் யாது? **சொ. விருத்தாச்சலம்**
36. தமிழ்நாட்டின் மாப்பஸான் என அழைக்கப்படுவது யார்? **புதுமைப்பித்தன்**
37. ஆற்றங்கரைப் பிள்ளையார் கதையின் ஆசிரியர் யார்? **புதுமைப்பித்தன்**
38. சிறுகதை உலகின் முடிசூடா மன்னன் என்று சிறப்பிக்கபடுபவர் யார்? **புதுமைப்பித்தன்**
39. தமிழ்நாட்டு கலீல் ஜிப்ரான் என்று அழைக்கப்பெற்றவர் யார்? **அப்துல் ரகுமான்**
40. வானம்பாடி இதழ் எந்த இலக்கியத்தின் வளர்ச்சிக்கு உதவியது? **புதுக்கவிதை**
41. குருடர்களால் யானையின் துதிக்கை எதனோடு ஒப்பிடப்படுகிறது? **உலக்கை**
42. புதுமைப்பித்தனின் முதல் படைப்பு நூல் எது? **குலோப்ஜான் காதல்**
43. புதுமைப்பித்தனின் முதல் படைப்பு வெளிவந்த இதழின் பெயர் என்ன? **காந்தி இதழ்**
44. மணிக்கொடியில் வெளிவந்த புதுமைப்பித்தன் முதல் சிறுகதை எது? **ஆற்றங்கரைப் பிள்ளையார்**
45. நந்தன், ஊழியன், மாத்ரு, கூத்தன் என்ற புனைபெயர்களில் சிறுகதை எழுதியவர் யார்? **புதுமைப்பித்தன்.**
46. வணக்கம் வள்ளுவ என்ற நூலின் ஆசிரியர் யார்? **ஈரோடு தமிழண்பன்**.
47. ஈரோடு தமிழண்பனின் இயற்பெயர் என்ன? **ஜெகதீசன்.**
48. சிற்ப எழுத்து என்ற கவிதையின் ஆசிரியர் யார்? **இரா.மீனாட்சி**
49. இதுவரை நான் என்ற தன்வரலாற்று நூலை எழுதியவர் யார்? **வைரமுத்து.**
50. சூரியனுக்கு கீழ் ஒரு வெள்ளைக் காகிதம் என்ற கவிதை நூலின் ஆசிரியர் யார்? **பழநிபாரதி.**

## பகுதி – ஆ

51. **பாரதியார் - சிறுகுறிப்பு வரைக.**

- ❖ மகாகவி என்று அழைக்கப்படுகிறார்.
- ❖ கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாளர், விடுதலை வீரர், சமூக சீர்த்திருத்தவாதி
- ❖ தமிழன் கவிதை மற்றும் உரைநடையில் தன்னிகரற்ற புலமை பெற்றவர்.
- ❖ சமகால மனிதர்கள் மகாத்மா காந்தி, திலகர், வ.உ.சிதம்பரம்பிள்ளை
- ❖ 1882 – ல் எட்டையபுரத்தில் பிறந்தார்.
- ❖ பத்திரிக்கை ஆசிரியராகவும், தமிழாசிரியராகவும் பணியாற்றியவர்.
- ❖ தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், வங்காளம் ஆகிய மொழிகளில் புலமை வாய்ந்தவர்.
- ❖ பாரதியாரின் முப்பெரும் காவியங்களாக கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்.

52. **பாரதிதாசன் - சிறு குறிப்பு வரைக.**

- ❖ தம் எழுச்சிமிக்க எழுத்தால் புரட்சிக்கவிஞர் என அழைக்கப்பட்டார்.
- ❖ குயில் என்னும் திங்கள் இதழ் நடத்தியவர்.
- ❖ பாரதியார் மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார்.
- ❖ கண்டமுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், பாரதிதாசன் போன்ற புனைப்பெயர்களில் எழுதிவந்தார்.
- ❖ திராவிட இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.
- ❖ பிசிராந்தையார் நாடக நூலுக்கு 1970 – ல் சாகித்திய அகாதமி விருது பெற்றார்.

53. **“நல்லதோர் வீணைசெய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?” உட்கருத்து யாது?**

- ❖ பாரதியார் கவிதைகளில் தெய்வீகப் பாடல்கள் என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளது.
- ❖ வேகத்துடன் செல்லும் பந்தினைப் போல உள்ளம் தன் விருப்பப்படி செயல்படும் உடலை வேண்டுதல்.
- ❖ தினமும் புதிதாகச் சுடரும் ஒளியினைப் போலச் சுடர்விடும் உயிரினைக் கேட்டல்.
- ❖ சலனமற்ற அறிவைக் கேட்டல்.
- ❖ உடல் தசையைத் தீகட்டாலும் அப்பொழுதும் சிவசக்தியைப் பாடும் நல்ல அகம் கேட்டல்.

- இவ்வாறாக பாரதியார் தன்னை நல்லதோர் வீணையாக உருவகம் செய்து சிவசக்தியிடம் வேண்டுகிறார்.

54. **தமிழ்க்காதல் என்னும் பாடற்பொருளை எழுதுக.**

- தமிழ்க்காதல் என்னும் பாடலை இயற்றியவர் பாரதிதாசன்.
- பூஞ்சோலையினையும் தமிழினையும் ஒரு பெண்ணாக உருவகித்துப் பாடியுள்ளார்.
- அழகான பூஞ்சோலையில் வண்ண மலர்கள் பல உள்ளன.
- ஆங்கே வண்டுகளின் ரீங்கார இசை, தென்றல் காற்று, கருங்கண் உடைய குவளை மலர்கள் போலும்
- முல்லை மலர்களின் வெண்மையான நகைப்பால் மயில்களின் நாடகத்தினால் அனைத்தும் ஒருங்கிணைந்த பூஞ்சோலைப் பெண்ணொருத்தி தன்வசம் ஆக்கி விட்டாள்.
- இவ்வாறாக அழகான பூஞ்சோலையுடன் தமிழினை வருணித்துப் பாடியுள்ளார்.

55. **கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை சிறுகுறிப்பு வரைக.**

- தேரூரில் பிறந்தவர்.
- பழைய மரபும் புதிய முறையும் கொண்டு கவிதைகளை இயற்றியவர்.
- குழந்தைக் கவிஞர் என்ற சிறப்புப் பெயர் கொண்டவர்.
- உமர்கய்யாம் பாடிய பாடல்களை அழகு தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.
- இவர் பாரதியாரிடம் நீங்காபற்றுக் கொண்டவர்.
- மலரும் மாலையும் ஆசியஜோதி, உமர்கய்யாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

56. **முள்….முள்…முள்.. என்னும் தலைப்பில் சிற்பியின் கவிதைத் திறத்தை வெளிப்படுத்துக.**

- புதுக்கவிதை உலகில் குறிப்பிடத்தக்கவர் சிற்பி பாலசுப்ரமணியம்.
- இவரின் ஒரு கிராமத்து நதி சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளது.
- முல்லைக்கு தேர் கொடுத்த பாரியின் வரலாற்றினைக் கூறி பாரியின் காலில் ஏறிய முள் எனக்கு என்ன தருவாய் என கேட்கும் வரிகள் சிறப்பு.
- பருவெடித்த முகமாய் பலாப்பழத்தைக் கண்டறியும் அழகுணர்ச்சி குறிப்பிடத்தக்கது.

- செடியின் புன்னகை ரோஜாவாக, பிறாண்டும் நகமும் முள்ளும் அமைகின்றது.
- அப்பாவின் கன்னத்தில் தன் அன்பை வெளிப்படுத்தும் குழந்தையின் உதடுக்கு தெரியும் முள் என கூறும் விதம் அழகு.
- இவ்வாறு கவிதைகள் அழகுணர்ச்சியும், சொற்செறிவும் கொண்டவையாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

57. **அப்துல் ரகுமானின் குருடர்களின் யானை தெரிவிக்கும் கருத்து யாது?**

- புதுக்கவிதைகளின் வரிசையில் முதலிடம் பிடித்தவர் அப்துல் ரகுமான்.
- கவிதைகளில் படிமக் குறியிட்டினை கையாண்டு இருப்பவர்.
- அழகுணர்ச்சி, மொழியின் கவித்துவம் இவருடைய கவிதைகளில் காணமுடியும்.
- நான்கு குருடர்கள் யானையின் உருவத்தினை வருணிக்கும் விதம் சிறப்பு.
- யானையின் கால் - உரல், யானையின் துதிக்கை – உலக்கை,
- யானையின் காது – முறம், யானையின் வால் - துடைப்பம்
- என நான்கு குருடர்களும் தங்களுக்கு தெரிந்த பொருளுடன் ஒப்பிட்டு யானையின் உருவத்தினை நினைத்துக் கொள்ளும் விதத்தினை அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.
- குருடர்களின் யானை என்னும் கவிதை ஒரு குறியிட்டு கவிதை ஆகும்.

58. **புதுமைப்பித்தன் - சிறு குறிப்பு வரைக.**

- நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி.
- கூரிய சமூக விமர்சனமும், நையாண்டியும், முற்போக்குச் சிந்தனையும், இலக்கியச் சுவையும் கொண்டவை இவரது படைப்புகள்.
- தமிழ்ச் சிறுகதை உலகில் தன்னிகரற்று விளங்கியவர்.
- தமிழ்நாட்டு மாப்பசான், சிறுகதை மன்னன் என்று சிறப்பிக்கப்படுபவர்
- தன் நையாண்டி நடையினால் தமிழ்ச் சிறுகதை வாசகர்களிடம் தனித்த ஓர் அடையாளத்தைப் பெற்றவர்.
- வட்டார வழக்குத் தமிழில் எழுதிய முதல் எழுத்தாளர் புதுமைப்பித்தன்.
- பொன்னகரம், துண்பக்கேணி, ஆற்றங்கரைப் பிள்ளையார், சாபவிமோசனம் போன்ற பலவும் இவரின் சிறந்த படைப்புகள்.

59. **கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் கதாபாத்திரத்தின் பண்புகளை எழுதுக.**

- ❖ இச்சிறுகதை சிறுகதை என்னும் ஒருமைத்தன்மை என்னும் பண்பைக் கொண்டுள்ளது.
- ❖ சிறுகதையின் தொடக்கம் கடவுளின் அறிமுகத்தைத் தந்து படிக்கும் ஆர்வத்தைத் தருகின்றது.
- ❖ கடவுள், கந்தசாமிப்பிள்ளை சந்திப்பு, வாழ்க்கை விலகல் என்னும் நேர்க்கோட்டில் சென்றுள்ளது.
- ❖ கடவுளுக்கும் பிள்ளைக்கும் நடக்கும் உரையாடல் நிகழ்வானது நகைச்சுவையோடு கதை வாசிப்பவரை சிந்திக்கவும் செய்யும்படி இச்சிறுகதையினைப் படைத்துள்ளார்.
- ❖ கதையின் முடிவு தான் படைத்த உலகத்திலேயே வாழ முடியாத அவலத்தில் முடிகிறது.

60. **மனிதர்களின் மனம் நிலையற்றது என்பதை மனித இயந்திரம் எங்ஙனம் கதைப்படுத்தியுள்ளது?**

- ❖ மனித எந்திரம் என்னும் தலைப்பிற்கேற்ப மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்னும் கதாபாத்திரத்தின் செயல்கள் சித்தரிக்கப்படுகின்றன.
- ❖ மனதின் ஆசைகள் அவர் மனதில் மாற்றத்தை உண்டாக்கின.
- ❖ நேர்மையும் உண்மையும் அவரைத் தவறான வழியில் செல்லவிடாது தடுத்து அவரது வழக்கமான நியதிக்குக் கொண்டு சென்றது.
- ❖ மீனாட்சி சுந்தரத்தின் பண்புகள் அவரை மனித எந்திரமாக்கினாலும் நேர்மையும் உண்மையும் அதற்க்குப் பயந்துக் கட்டுப்பட்டு நடக்கும் மனிதயந்திரம் என்பதே அவரின் தனிச்சிறப்பாக அமைவது.

## பகுதி - இ

61. **பாரதியார் பராசக்தியிடமும் சிவசக்தியிடமும் வேண்டுவன யாவை?**

- ❖ மகாகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு.
- ❖ பாரதி தன் கவித்திறத்தாலே இவ்வுலகை மாற்றி அமைத்திட காணிநிலமும், மாளிகையும், தென்னை மரங்களும் நிலவும், குளிரும், காற்றும், பத்தினிப் பெண்ணும் வேண்டும் என்று பராசக்தியிடம் வேண்டுகிறார்.
- ❖ தன்னைச் செயல்படுத்தும் உறுதியான மனமும், சுடர்விடும் உயிரும், தசையினைத் தீஞ்சுடினும் சிவசக்தியைப் பாடும் அருளும் என்று தன்னை வீணையாக உருவகித்துத் தன் கவித்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.
- ❖ இவ்வாறாக பாரதியார் தம் கவித்திறத்தால் பராசக்தியிடமும், சிவசக்தியிடமும் வேண்டும் செய்திகளை நாம் அறியலாம்.

62. **‘எந்நாளோ’ என்னும் பகுதியில் பாரதிதாசன் விரும்பும் கனவுகள் எவை?**

- தமிழ் மக்கள் அனைவரும் கல்வி பெறவேண்டும்.
- உலகத்தில் உள்ள புத்தகச்சாலை எங்கும் தமிழர்களின் நூல்கள் நிறைந்திட வேண்டும்.
- தமிழ்க் கவிதைகள் ஆயிரம் மொழிகளில் மொழி பெயர்த்திட வேண்டும்.
- தமிழகத்தில் தொழிற்சாலைகள் நிறைந்திட வேண்டும்.
- தமிழர்கள் போர்ப்பயிற்சி பெற்று உலகை ஆள வேண்டும்.
- தமிழன் காட்டும் சுட்டுவிரல் பின்னே உலகம் நடைபோட வேண்டும்.
- ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானம் ஆக வேண்டும் என்று வேண்டுகிறார்.
- இவ்வாறாக எந்நாளோ? என்னும் பகுதியில் சில கனவுகள் முன்வைத்து அக்கனவு நிறைவேறும்நாள் எந்நாளோ? எனக் கேட்கிறார்.

63. **கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை ‘ஆறு’ கவிதையின் மூலம் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை?**

- இவர் தம் கவிதைகள் எளிமையும், இனிமையும் சந்தநயமும் கொண்டவை.
- ஆறு செல்கின்ற பாதையின் கரையோரங்களில் உள்ள நிலங்கள் பயன்பெறும் விதம்.
- அணைகள், குளம், ஓடை, கால்வாயின் வாயிலாக மக்களுக்குப் பயன்படுவிதம்.
- இவ்வாறு ஆறு தன் செல்லும் இடங்கள் எல்லாம் அவ்விடத்தை வளமாக்கி, மனிதனுக்கு மட்டும் அல்லாது, இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பயன்படுகிறது.

64. **புதுமைப்பித்தன் ஆற்றங்கரைப் பிள்ளையார் கதையில் பின்புலமாகக் குறிப்பிடும் கருத்து யாது விளக்குக.**

- ஆற்றங்கரைப்பிள்ளையாரின் தோற்றம்
- சிலுவைக்காரனும் பிள்ளையாரும்
- கிழவரும் பிள்ளையாரும்
- பிள்ளையாரின் கனவு
- ஆகிய தலைப்புகளின் வழி பிள்ளையார் என்னும் கடவுள் பிற சமயங்களிடம் அகப்பட்டுத் திண்டாடும் அவலநிலையை அறியலாம்.
- இக்கதையின் கதைக்கருவும் கதைப்பின்புல நடைச்சிறப்பினையும் புதுமைப்பித்தன் தனக்கே உரிய பாணியில் கடவுள் சார்ந்த மக்களின் எண்ணங்களை அழகாக பிரதிப்படுத்தியுள்ளார்.